மோட்டார் வாகன விபத்து இழப்பீடு கோரிக்கைத் தீர்ப்பாயம்,மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,தூத்துக்குடி
முன்னிலை:திருமதி. டி. பகவதிஅம்மாள், பி.ஏ., பி.எல்.,
தலைமை நீதித்துறை நடுவர், தூத்துக்குடி
2019ம் ஆண்டு ஜீன் மாதம் 4ம் நாள் செவ்வாய் கிழமை
எம்.சி.ஓ.பி. 283/17

K.ஜெயகுமார், ....மனுதாரர்

/எதிர்/

1. N.முப்பிடாதி,

2. நியூ இந்தியா அசுரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
திருநெல்வேலி. .....எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது 15.11.2017 அன்று தூத்துக்குடி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் எம்.சி.ஓ.பி.376/2017 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தில் 14.12.2017 அன்று எம்.சி.ஓ.பி.283/2017 ஆக இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆலன் அரிஸ்டாடைல் அவர்களும்,1வது எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதரப்பாக்கப்பட்டும், 2வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T. சுபேந்திரன் அவர்கள் ஆஜராகியும் எதிர் உரை தாக்கல் செய்யாததால் அழைத்தும் ஆஜரின்றி ஒருதரப்பாக்கப்பட்டும், பின்னிட்டு இ.ம.எண்.1/2019, 16.03.2019 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் 25.06.2018 அன்று 2ம் எதிர்மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவு ரத்து செய்யப்பட்டும், இம்மனு 04.06.2019 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு விசாரணைக்கு வந்த போது மனுதாரரின் வருகை தவறுகைக்காக இந்நீதிமன்றம் வழங்கும்.

## உத்தரவு:-

மனுதாரர் இம்மனுவை மோட்டார் வாகன சட்டம் 59/1988 பிரிவகள்.140 மற்றும் 166 படிவம் II விதிகள் 4(1) மற்றும் (2) தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாய விதிகள் 1989 அரசாணை எண்.1170 உள்துறை (போக்குவரத்து -VII) தேதி 01.07.1989-ன் கீழ், கடந்த 25.07.2017 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் மனுதாரர் அடைந்த காயங்களுக்கு எதிர்மனுதாரர்கள்

மனுதாரருக்கு ரூ.25,00,000/-த்யை இழப்பீடாக வழங்குமாறும், மேற்படி தொகைக்கு விபத்து நடந்த நாள் முதல் தொகை முழுவதும் வசூலாகும் வரை ஆண்டொன்றுக்கு 12% வட்டி மற்றும் செலவு தொகையுடன் வழங்குமாறு கோரி தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் அழைத்தும் ஆஜரில்லை. மனுதாரர் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லை. எனவே மனுதாரரின் வருகை தவறுகையின் காரணமாக இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

2019-ம் ஆண்டு ஜுன் மாதம் 4-ம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- த.பகவதி அம்மாள்,
மோட்டார் வாகன விபத்து இழப்பீடு
கோரிக்கைத் தீர்ப்பாய நீதிபதி, மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர்,
தூத்துக்குடி.

இணைப்பு:- இல்லை

ஒம்/- த.பகவதி அம்மாள்,
மோட்டார் வாகன விபத்து இழப்பீடு
கோரிக்கைத் தீர்ப்பாய நீதிபதி, மற்றும்
தலைமை நீதித்துறை நடுவர்,
தூத்துக்குடி.